NP

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -06

ந.க.எண் 023758/பிடி2/இ2/2024, நாள் 26.03.2025.

**பொருள்:** பள்ளிக் கல்வி – நான் முதல்வன் திட்டம் – உயர்கல்வி வழிகாட்டி திட்டம் – **அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டி குழு அமைத்தல் மற்றும் மேல்நிலை பள்ளிகளில் உயர் கல்வி வழிகாட்டி** குழு (Career Guidance Cell) **கூட்டுதல்/செயல் படுத்துதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல்** – மாநில அளவிலான கருத்தாளர்களுக்கான பயிற்சி மற்றும் மாவட்ட அளவிலான உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல் – சார்ந்து.

**பார்வை :** 1. தமிழ் நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலரின் கடிதம் ந.க.எண் 680/L1/CG-125/MS/2023, நாள் 25.03.2025

********

பார்வையில் காணும் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலரின் கடிதத்தில் **"உயர்கல்வி வழிகாட்டி"** திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டி குழு (Career Guidance Cell) கடந்த 06.05.2023 முதல் செயல்பாட்டில் உள்ளதாகவும் **2022-23 ஆம் கல்வியாண்டில் 12ஆம்** வகுப்பு பொதுத் தேர்வெழுதிய 3,97,809 **அரசுப் பள்ளி மாணவர்களில்,** 2,72,744 ( 69%) **அரசுப் பள்ளி மாணவர்களும்,** 2023-24 **ஆம் கல்வியாண்டில்** 12 **ஆம்** வகுப்பு பொதுத் தேர்வெழுதிய 3,34,723 **அரசுப் பள்ளி மாணவர்களில்,** 2,46,961 **(74%) அரசுப் பள்ளி மாணவர்களும் பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்று உயர்கல்வி பயின்று வருகின்றனர் என்பது UMIS இணைய தள அறிக்கை வாயிலாக உறுதி படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.** (உயர் கல்வி சேர்க்கை பெற்ற / உயர் கல்வி சேர்க்கை பெறாத மாணவர்கள் விவரங்கள் **இணைப்பு 1 இல்** வழங்கப்பட்டுள்ளது).

மேலும், ***இதற்கு சீரிய முயற்சிகளையும் பங்களிப்பையும் வழங்கிய அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும், அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், அனைத்து உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கும், அனைத்து வகுப்பாசிரியர்களுக்கும் மற்றும் அனைத்து உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

இதன் தொடர்ச்சியாக, இக்கல்வியாண்டில் (2024 -2025) உயர்கல்வி வழிகாட்டி குழுவின் உதவியுடன் அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களும் உயர்கல்விக்கு செல்ல கீழ்க்கண்ட செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பார்வையின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

Padasalai.Net

# நான் முதல்வன் - உயர்கல்வி வழிகாட்டி

## உயர்கல்வி வழிகாட்டி குழுவின் முக்கிய செயல்பாடுகள்

### உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள்

- தலைமை ஆசிரியர்
- உயர் கல்வி வழிகாட்டி ஆசிரியர்
- முன்னாள் மாணவர்கள் (5)
- பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் (3)

| கல்லூரி கனவு | பயிற்சி (CG Cell) | கிராம சபை | உயர்கல்வி வழிகாட்டி முகாம் | பாலிடெக்னிக் முகாம் | உயர்வுக்கு படி முகாம் |
|---|---|---|---|---|---|
| APRIL 08 | APRIL 09 | MAY 01 | MAY 06 | JUNE 17 | JULY 29 |

குறிப்பு: உத்தேச தேதிகள்

**ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை உள்ள பொதுவான செயல்பாடுகள்**
- இணையவழித் சான்றிதழ் படிப்புகள் (TNSDC)
- போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தல், தயாரபடுத்துதல் மற்றும் தேர்வு எழுத வைத்தல்
- உயர்கல்வி வழிகாட்டிக் கூட்டம்

**ஏப்ரல்**
- உயர்கல்வி அறிவோம்
- கல்லூரி கனவு
- மாநில மற்றும் மாவட்ட கருத்தாளர்களுக்கான பயிற்சி

**மே**
- தொடர்ந்து கற்போம்
- கிராம சபை
- உயர்கல்வி வழிகாட்டி முகாம் (APPLY NOW)
- துணைத் தேர்வுக்கு தயாராகுதல்

**ஜூன்**
- உயர்கல்விக்கு விண்ணப்பித்தல் (HIGHER EDUCATION – APPLY NOW)
- பாலிடெக்னிக் முகாம் (CAMP)

**ஜூலை**
- உயர்வுக்கு படி முகாம்
- துணை தேர்வு எழுதுதல் மற்றும் முடிவுகள் காணுதல் (EXAM RESULTS)

**ஆகஸ்ட்**
- HM Survey
- திறன்சார்ந்த படிப்புகள் (TNSDC)
- உயர்கல்விக்கு போகாதவர்களின் காரணங்களை கண்டறிதல் (14417 கல்வி)

Padasalai.Net

## உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களின் பொறுப்புகள்

### 1. தலைமையாசிரியர் / உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்:

க ) உயர்கல்வி அறிவோம்:

9 முதல் 12 ஆம் வகுப்பு வரை தேர்வெழுதிய மற்றும் தேர்வு எழுதாத மாணவர்களுக்கு பள்ளிகளில் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகம் வாயிலாக (Hi– Tech Lab) "உயர்கல்வி அறிவோம்" நிகழ்வில் (இணைப்பு 2 இல் உள்ளவாறு) பல்வேறு உயர் கல்வி படிப்புகள் மற்றும் அதில் சேருவதற்கான வழிமுறைகள் / தகவல்கள் குறித்து அந்தந்த துறைகள் சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு நேரடி மற்றும் பதிவு செய்யப்பட்ட காணொலிப் பதிவுகள் 01.04.2025 முதல் 30.04.2025 வரை ஒளிபரப்பப்பட உள்ளது.. இந்நிகழ்வில் விருப்பமுள்ள மாணவர்கள் பங்கு பெறுவதையும் பங்கு பெறும் மாணவர்களின் வருகைப் பதிவை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் வாயிலாக EMIS இணைய தளத்தில் பதிவு செய்வதையும் தலைமையாசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும் .

கா ) போட்டித் தேர்வுகள்:

இணைப்பு 3 இல் வழங்கப்பட்டுள்ள போட்டித் தேர்வுகளுக்கு விருப்பமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கவும், விண்ணப்பித்த மாணவர்கள் தேர்வுகளுக்கு தயாராகவும், தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்கள் தேர்வு எழுதுவதையும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள், வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் வாயிலாக உறுதி செய்திட தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கி ) இணையவழி சான்றிதழ் படிப்புகள்:

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு நான் முதல்வன் இணையதள பக்கம் ( Naan Mudhalvan Portal – https://portal.naanmudhalvan.tn.gov.in/nmschools/schoologin/ ) வாயிலாக 59 இணையவழி சான்றிதழ் படிப்புகள் (இணைப்பு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மாணவர்கள் தேர்வுகள் எழுதி முடித்த பின்னர் தங்களது EMIS எண்ணை பயன்படுத்தி அவர்கள் விரும்பும் சான்றிதழ் படிப்புகளில் சேர்ந்து பயனடைவதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

கீ) உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கான மாவட்ட அளவிலான இணையவழி பயிற்சி:

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்புக்கு பிறகு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் கல்வியாளர் சார்ந்த

Padasalai.Net

பள்ளியின் உயர் கல்வி வழிகாட்டி குழுவின் உறுப்பினர்களாக திகழ்வார்கள். அனைத்து உறுப்பினர்களின் விவரங்களும் சார்ந்த பள்ளியின் EMIS இணையதளத்தில் தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும், விருப்பமுள்ள முன்னாள் மாணவர்கள் தங்களை நான் முதல்வன் இணையதள பக்கம் (https://naanmudhalvan.tnschools.gov.in/) வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் பயிற்சி பெற்ற கருத்தாளர்களால், பள்ளி அளவில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் இணைய வழி பயிற்சி வருகின்ற **ஏப்ரல் 2 ஆம் வாரம் முதல் 4 ஆம் வாரம்** வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளியின் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்வதை உறுதி செய்திடவும், அவர்களின் வருகைப் பதிவை EMIS இணையதளத்தில் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் பதிவிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **(இணைப்பு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி – EMIS Attendance Demo Video )**

**கு) உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கான பள்ளி அளவிலான கூட்டம்:**

பயிற்சி பெற்ற உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு பள்ளி அளவிலான கூட்டம் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட வேண்டும். இக்கூட்டத்தில், இக்குழுவின் செயல்பாடுகளையும், உயர்கல்வி வழிகாட்டி குழுவின் முக்கிய பங்களிப்புகள் குறித்தும் கலந்துரையாடி அவர்களின் வருகையை EMIS இணையதளத்தில் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் பதிவிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கெ) கல்லூரிக் கனவு முகாம்:**

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான **கல்லூரிக் கனவு முகாம் ஏப்ரல் 2 ஆம் வாரம்** நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் **(இணைப்பு 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள)** அனைவரும் முகாமில் கலந்து கொள்வதை உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் வாயிலாக உறுதி செய்திட தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கே) கிராம சபை கூட்டம்:**

மே 1 ஆம் தேதி நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு கடந்த இரண்டாண்டுகள் நடைபெற்ற உயர்கல்வி சேர்க்கை பற்றியும், இவ்வருடம் நடைபெறும் உயர்கல்வி சேர்க்கை பற்றியும் கலந்துரையாடுவதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

Padasalai.Net

கை) உயர்கல்வி வழிகாட்டி முகாம்:

பொதுத்தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத மாணவர்கள், உயர்கல்விக்கும், துணைத்தேர்வுக்கும் விண்ணப்பிக்க தேவையான உதவிகள் மற்றும் ஆவணங்கள் பெற்றுத் தர அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டி உறுப்பினர்களின் உதவியுடன் உயர்கல்வி வழிகாட்டி முகாமை மே 6 முதல் 23 ஆம் தேதி வரை நடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பித்த மாணவர்களின் விவரங்களை EMIS இணையத்தளத்தில் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் பதிவிட வேண்டும். (இணைப்பு 7இல் HM Survey Demo Video, உயர்கல்விக்கு விண்ணப்பிக்கக் கூடிய கல்லூரிகள், ஊக்கத் தொகை மற்றும் உதவித் தொகை திட்டங்கள், கல்விக் கடன் குறித்த தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளது).

கொ) தொடர்ந்து கற்போம்:

10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்களை துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்க வைத்த பிறகு, அம்மாணவர்களுக்கு தொடர்ந்து கற்போம் பயிற்சி வாயிலாக சிறப்பு வகுப்புகள் நடைபெறுவதையும் அனைத்து மாணவர்களும் பயிற்சியில் பங்கு பெறுவதையும், துணைத்தேர்வுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தேர்வு எழுதுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

கோ) பாலிடெக்னிக் (பல்தொழில்நுட்பக் கல்லூரி) முகாம் :

10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 11 ஆம் வகுப்பு பயில விருப்பமில்லாத மாணவர்கள், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற / பெறாத / உயர்கல்விக்கு தொடர விருப்பமில்லாத மாணவர்கள் பாலிடெக்னிக் படிப்புகளுக்கு சேர விரும்பினால் அவர்களுக்கென்று ஜூலை 3 ஆம் வாரம் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் முகாம் நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் மாணவர்கள் கலந்து கொள்வதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்திட வேண்டும். (இணைப்பு 8 இல் பாலிடெக்னிக் கல்லூரிகள் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

கௌ) உயர்வுக்கு படி முகாம் :

துணைத்தேர்வுகளுக்கான முடிவுகள் வெளியான பிறகு, உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவர்களுக்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து நடத்தும் உயர்வுக்கு படி முகாமிற்கு உயர்கல்வி வழிகாட்டி குழு வாயிலாக அனைத்து மாணவர்களும் கலந்து கொள்வதையும், அவர்களின் சேர்க்கையை EMIS தளத்தில் பதிவு செய்வதையும் தலைமையாசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

Padasalai.Net

க்) உயர்கல்விக்கான ஆவணங்களை பெற்று தருதல்:

உயர்கல்விக்கு தேவையான சான்றிதழ்கள் இல்லாத மாணவர்களின் பட்டியலை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களிடம் வழங்கி அம்மாணவர்களுக்கு பள்ளிக்கு அருகாமையில் உள்ள இ – சேவை மையத்தின் வாயிலாக விண்ணப்பித்து உரிய சான்றிதழ்களை பெற்று தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உயர்கல்வி வழிகாட்டி உறுப்பினர்களான பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களின் பொறுப்புகள் :

| வ. எண் | முக்கிய செயல்பாடுகள் | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் | முன்னாள் மாணவர்கள் |
|---|---|---|---|
| 1 | உயர்கல்வி அறிவோம் | இந்நிகழ்வு குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். | இந்நிகழ்வு குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். |
| | | மேலும், இந்நிகழ்வை ஒருங்கிணைக்க உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு உதவியாக இருத்தல் வேண்டும். | மேலும், இந்நிகழ்வை ஒருங்கிணைக்க உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு உதவியாக இருத்தல் வேண்டும். |
| 2 | போட்டித்தேர்வுகள் | 1. போட்டித்தேர்வுகளின் முக்கியத்துவத்தை பெற்றோர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். விருப்பமுள்ள மாணவர்களை பள்ளிகளில் ஒருங்கிணைக்க வேண்டும். | விருப்பமுள்ள மாணவர்களுக்கு போட்டித்தேர்வுக்கு விண்ணப்பிக்க உதவிகள் தேவைப்பட்டால் உதவலாம். |
| | | 2. விண்ணப்பிக்க தேவையான சான்றிதழ்களை மாணவர்களுக்கு பெற்றுத் தர உதவ வேண்டும். | |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 3 | இணையவழி சான்றிதழ் படிப்புகள் | இப்படிப்புகள் குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.<br>விருப்பமுள்ள மாணவர்களை பள்ளியில் ஒருங்கிணைக்க வேண்டும், | உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் வாயிலாக இச்சான்றிதழ் படிப்புகளை மாணவர்கள் பயில உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியருக்கு உதவியாக இருக்க வேண்டும். |
| 4 | உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கான மாவட்ட அளவிலான இணையவழி பயிற்சி | இணையவழியில் நடைபெறும் இப்பயிற்சியில் தவறாமல் கலந்து கொண்டு தமக்கான பொறுப்புகளை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் | இணையவழியில் நடைபெறும் இப்பயிற்சியில் தவறாமல் கலந்து கொண்டு தமக்கான பொறுப்புகளை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் |
| 5 | உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கான பள்ளி அளவிலான கூட்டம்: | பள்ளி அளவில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் தவறாமல் கலந்து கொண்டு மாணவர்களின் உயர்கல்விக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும். | பள்ளி அளவில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் தவறாமல் கலந்து கொண்டு மாணவர்களின் உயர்கல்விக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும். |
| 6 | கல்லூரிக் கனவு முகாம் | 12 ஆம் வகுப்பு மாணவர்களை இம்முகாமில் கலந்து கொள்ள இல்ல நேர்காணலின்( House Visit) வாயிலாக ஊக்கப் படுத்த வேண்டும். மேலும் பெற்றோர்களுக்கும் இம்முகாம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். | 12 ஆம் வகுப்பு மாணவர்களை இம்முகாமில் கலந்து கொள்ள இல்ல நேர்காணலின்( House Visit) வாயிலாக ஊக்கப் படுத்த வேண்டும். மேலும் பெற்றோர்களுக்கும் இம்முகாம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். |
| 7 | கிராம சபை கூட்டம் | மே 1 ஆம் தேதி நடைபெறவிருக்கும் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு இக்கல்வியாண்டில் மாணவர்களின் உயர்கல்வியில் நாம் சார்ந்த கிராமத்தின் பங்கு குறித்து கலந்துரையாட வேண்டும். | மே 1 ஆம் தேதி நடைபெறவிருக்கும் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு இக்கல்வியாண்டில் மாணவர்களின் உயர்கல்வியில் நாம் சார்ந்த கிராமத்தின் பங்கு குறித்து கலந்துரையாட வேண்டும். |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 8 | உயர்கல்வி வழிகாட்டி முகாம் | பொதுத்தேர்வு முடிவுக்கு பிறகு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கவும், தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கவும், அம்மாணவர்களை ஒருங்கிணைக்க உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியருக்கு உதவியாக இருக்க வேண்டும்.<br>பள்ளிக்கு வராத மாணவர்களை இல்ல நேர்காணலின் (House Visit) வாயிலாக சந்தித்து அவர்களை பள்ளிக்கு வரவழைத்து உயர்கல்விக்கு விண்ணப்பிக்க உதவ வேண்டும் . மேலும் அவர்களின் பெற்றோர்களுக்கும் உயர்கல்வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். | பொதுத்தேர்வு முடிவுக்கு பிறகு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கவும், தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கவும், அம்மாணவர்களை ஒருங்கிணைக்க உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியருக்கு உதவியாக இருக்க வேண்டும் |
| 9 | தொடர்ந்து கற்போம் | 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு தொடர்ந்து கற்போம் நிகழ்வை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி, அம்மாணவர்கள் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும். | இந்நிகழ்வில் கலந்து கொள்ள பள்ளிக்கு வரும் மாணவர்களை ஒருங்கிணைக்க உயர்கல்வி ஆசிரியருக்கு உதவியாக இருக்க வேண்டும். |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 10 | பாலிடெக்னிக் (பல்தொழில்நுட்பக் கல்லூரி) முகாம் | 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 11 ஆம் வகுப்பு பயில விருப்பமில்லாத, 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றும்/பெறாமாலும் உயர்கல்வி தொடர விருப்பமில்லாத மாணவர்களின் விவரங்களை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடம் பெற்று இம்முகாம் குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், இம்மாணவர்கள் முகாமில் கலந்து கொள்ள ஒருங்கிணைக்க வேண்டும். | 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 11 ஆம் வகுப்பு பயில விருப்பமில்லாத, 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றும்/பெறாமாலும் உயர்கல்வி தொடர விருப்பமில்லாத மாணவர்களின் விவரங்களை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடம் பெற்று இம்முகாம் குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், இம்மாணவர்கள் முகாமில் கலந்து கொள்ள ஒருங்கிணைக்க வேண்டும். |
| | | பயன்பெறும் மாணவர்களின் பட்டியலை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடம் வழங்க வேண்டும். | |
| 11 | உயர்வுக்கு படி முகாம் | துணைத்தேர்வு முடிவுகள் வெளியானவுடன், உயர்கல்வியில் சேராத மாணவர்களின் விவரங்களை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடமிருந்து பெற்று, இம்முகாம் குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், மாணவர்கள் இம்முகாமில் கலந்து கொள்ள ஒருங்கிணைக்க வேண்டும். | துணைத்தேர்வு முடிவுகள் வெளியானவுடன், உயர்கல்வியில் சேராத மாணவர்களின் விவரங்களை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடமிருந்து பெற்று, இம்முகாம் குறித்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், மாணவர்கள் இம்முகாமில் கலந்து கொள்ள ஒருங்கிணைக்க வேண்டும் |
| | | பயன்பெறும் மாணவர்களின் பட்டியலை உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடம் வழங்க வேண்டும். | |

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 12 | உயர்கல்விக்கான ஆவணங்கள் பெற்று தருதல் | போட்டித்தேர்வு, உயர்கல்வி, உதவித்தொகை மற்றும் கல்விக் கடன் ஆகியவைகளுக்கு விண்ணப்பிக்க தேவையான சான்றிதழ்கள் தேவைப்படும் மாணவர்களின் விவரங்களை உயர்கல்வி ஆசிரியரிகளிடமிருந்து பெற்று அவர்களுக்கு உதவ வேண்டும். | ஏதும் இல்லை |

<u>மாநில மற்றும் மாவட்ட அளவிலான இணையவழி பயிற்சி:</u>

உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்விக்கு தடையாக இருக்கும் காரணங்களை கண்டறிந்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அனைத்து மாணவர்களும் உயர்கல்விக்கு செல்வதற்கு ஒரு பாலமாக இருக்க வேண்டும். மேலும், அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு தொடர் பயிற்சி வழங்கப்பட வேண்டும். இதனை கருத்தில் கொண்டு இதற்காக ஒரு மாவட்டத்திற்கு 2 முதல் 4 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்களும், உயர்கல்வி வழிகாட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் –1, ஆசிரியர் பயிற்றுநர்–1 என மொத்தம் 4 முதல் 6 முதன்மை கருத்தாளர்களுக்கு மாநில அளவில் இணைய வழி பயிற்சி அளிக்கப்படவுள்ளது. மாநில அளவில் பயிற்சி பெற்ற முதன்மை கருத்தாளர்கள் பள்ளி அளவில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி உறுப்பினர்களுக்கு இணையவழியில் பயிற்சி அளிப்பார்கள்.

<u>மாநில அளவிலான, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதுகலை விரிவுரையாளர்களுக்கான பயிற்சி விவரங்கள்</u> :

1. 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் ஏப்ரல் முதல் வாரத்தில் இருந்து அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி குழு செயல்படவிருக்கின்ற நிலையில், மாவட்ட முதன்மை கருத்தாளார்களுக்கு ( DIET Faculty) இணையவழியில் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

Padasalai.Net

2. இப்பயிற்சியானது இணைய வழியில் இரண்டு கட்டங்களாக நடைபெறவிருகின்றது. அவைகள் சார்ந்த விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது. ( இணைப்பு – 9 இல் பயிற்சியில் கலந்துக் கொள்ள வேண்டிய கருத்தாளர்களின் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது )

| நாள் | பங்கேற்பாளர்கள் | நேரம் | பயிற்சி QR குறியீடு |
|---|---|---|---|
| 27.03.2025 | முதற்கட்டமாக கீழ்கண்ட மாவட்டங்களை சார்ந்த 75 கருத்தாளர்கள் பங்கேற்க கேட்டு கொள்ளப்படுகிறார்கள் . (அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை) | காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை | |
| 27.03.2025 | இரண்டாம் கட்டமாக கீழ் கண்ட மாவட்டங்களை சார்ந்த 70 கருத்தாளர்கள் பங்கேற்க கேட்டு கொள்ளப்படுகிறார்கள் (இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி,தஞ்சாவூர், நீலகிரி, தேனி, தூத்துக்குடி,திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர்,விழுப்புரம், விருதுநகர்) | மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரை | |

NP
Padasalai.Net

## மாநில அளவிலான உயர்கல்வி வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி விவரம்

அனைத்து மாவட்டங்களில் இருக்கின்ற உயர்கல்வி வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வட்டார வள ஆசிரியர் பயிற்றுனர்களுக்கான மாநில அளவிலான இணைய வழி பயிற்சி வருகின்ற ஏப்ரல் 2 ஆம் தேதி அன்று நடைபெறவுள்ளது.

| நாள் | பங்கேற்பாளர்கள் | நேரம் | பயிற்சி QR குறியீடு |
|---|---|---|---|
| 02.04.2025 | அனைத்து மாவட்ட உயர்கல்வி வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வட்டார வள ஆசிரியர் பயிற்றுனர்கள். | காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை | |

## மாவட்ட அளவில் – உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கான இணையவழி பயிற்சி

மாநில அளவில் பயிற்சி பெற்ற 221 கருத்தாளர்களின் வாயிலாக, அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கு ஏப்ரல் 9 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை ஏதேனும் ஒரு நாள் மாவட்ட அளவில் இணையவழி பயிற்சி நடைபெறும். பயிற்சி சார்ந்த தகவல்கள் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே தலைமையாசிரியர் வாயிலாக தெரிவித்து அனைவரும் கலந்துக் கொள்வதனை உறுதி செய்வது மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் பொறுப்பாகும்.

| நாள் | பங்கேற்பாளர்கள் | பயிற்றுநர் |
|---|---|---|
| ஏப்ரல் 9 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை | 1. அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்<br>2. உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்<br>3. பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், துணைத் தலைவர்<br>4. கல்வியாளர்<br>5. பள்ளியின் முன்னாள் மாணவர்கள் | மாவட்டக் கருத்தாளர்கள் |

மேற்கண்ட பயிற்சிகளில் பங்கேற்பாளர்கள் உற்சாகத்துடனும், ஈடுபாட்டுடனும் தவறாது பங்கேற்று மாணவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்வதோடு மாவட்ட அளவில் நடைபெறவிருக்கின்ற பயிற்சிகளுக்கு உரிய ஏற்பாடுகளையும் செய்து தருமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களுக்கான வாராந்திர முக்கிய செயல்பாடுகள் இணைப்பு 10 இல்

Padasalai.Net

இணைக்கப்பட்டுள்ளது. தலைமையாசிரியர் வாயிலாக இச்செயல்பாடுகளை சார்ந்த பள்ளியின் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களிடம் பகிர்ந்து செயல்பட உறுதி செய்ய வேண்டும்.

<u>மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிற்சிக்கான மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் பொறுப்புகள்:</u>

1. மாநில அளவிலான இணையவழி பயிற்சியில் முதன்மை கருத்தாளர்கள் (DIET Faculties, CG DCs & BRTEs ) உரிய நேரத்தில் பங்கேற்பதை உறுதி செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. அதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 9 ஆம் தேதி முதல் ஏப்ரல் 30ஆம் தேதி வரை மாவட்ட அளவில் இணைய வழியில் நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான பயிற்சிக்கு, மாநில அளவில் பயிற்சி பெற்ற பங்கேற்பாளர்கள் தொடர்ந்து கருத்தாளர்களாகச் செயல்படத் தகுந்த அனுமதி வழங்கி பயிற்சிகள் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
3. மேலும், மாவட்ட அளவில் நடைபெறவிருக்கும் பயிற்சியில் பங்கேற்கும் உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்கள் வருகைப் பதிவை தலைமையாசிரியர் வாயிலாக EMIS இணையதளத்தில் இணைப்பு 5 இல் (EMIS Attendance Demo Video) கொடுக்கப்பட்டுள்ளவாறு பூர்த்தி செய்யுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.
4. மாவட்ட அளவிலான பயிற்சிகளுக்கு தகுந்த இணைய வசதி (Internet Facility), ஒளிபடக்காட்டி (Projector), திறன் பலகை (Smart Board) போன்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். மேலும், கருத்தாளர்களுக்கு மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்பட வேண்டும், அதற்கான செலவினத்தை உயர்கல்வி வழிகாட்டி Miscellaneous account தலைப்பின் கீழ் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.
5. பள்ளி உயர்கல்வி வழிகாட்டி குழு உறுப்பினர்களின் விவரங்களை அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்களிடமிருந்து பெற்று கொள்ளலாம் .

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உயர்கல்வி வழிகாட்டி குழுக்கான செயல்பாட்டு வழிமுறைகள், குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் தொடர்பான வழிகாட்டுதல்களை அனைத்து அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Padasalai.Net

Annexures (QR Codes)

| Annexure | Details | QR Codes |
|---|---|---|
| 1. | AY 2022-23 & 2023-2024 Higher Education Enrollment as Per UMIS | |
| 2. | உயர்கல்வி அறிவோம் காணொளிகள் | |
| 3. | போட்டித்தேர்வுகள் | |
| 4. | இணையவழி சான்றிதழ் படிப்புகள் | |

Padasalai.net

| | | |
|---|---|---|
| 5. | EMIS Attendance Demo Video | |
| 6. | கல்லூரி கனவு முகாம் மாணவர்கள் பட்டியல் | |
| 7(i) | District Wise – Institutions & Course List | |
| 7(ii) | FAQs on Education Loan | |
| 7(iii) | FAQ on Scholarships | |

Padasalai.net

| | | |
|---|---|---|
| 7(iv) | 7.5 % Scheme FAQs | |
| 7(v) | Pudhumai Pen Scheme FAQs | |
| 7(vi) | Tamil Pudhalvan Scheme FAQs | |
| 8 | பாலிடெக்னிக் கல்லூரிகள் பட்டியல் | |
| 9 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதுகலை விரிவுரையாளர் பட்டியல் | |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 10 | Toolkit for CEO,APO,DI, DC,BRTE–CG and Career Guidance Cell members | NP |

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை–6.– அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Padasalai.Net